## குள்ளநரி என்பது யாது?

குள்ளநரிகள் என்பவை நாய்போன்ற சிறிய வன விலங்குகள் ஆகும், இவை பொதுவாக 30 முதல் 40 பவுண்டுகள் எடையுள்ளவை. அவற்றின் ரோமங்கள் வெளிர்-பொன் நிறத்தில் இருந்து சிவப்பு மற்றும் பழுப்பு நிறங்கள் என மாறுபடும்.

இந்த இடம் மாற்றி வாழக்கூடிய விலங்குகள் பிராம்டன் போன்ற பெரிய நகரங்களில் உள்ள மலை இடுக்குகள், பள்ளத்தாக்குகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகள் உள்ளிட்ட கிராமப்புறங்களில் செழித்து வளர்கின்றன. அவை மறைந்து வாழ வேண்டிய நிலையில் இருப்பதில்லை என்பதால் ஆண்டு முழுவதும் கண்களில் படும்.

குள்ளநரிகள் பொதுவாகவே பயம் கலந்த வெட்கம் கொண்டவை மற்றும் தாக்குதல் தொடுக்காதவை என்றாலும் அப்படித் தோன்றுபவை

## நமது சமூகத்தினுள் குள்ளநரிகள்

குள்ளநரிகள் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைந்த அங்கம் ஆகும் மற்றும் தேவையான மற்றும் ஆரோக்கியமான இரையாகக்கூடிய-வேட்டையாடக்கூடிய சமநிலைக்கு பங்களிக்கின்றன. அவை தனித்து இருக்கும் போது, அவற்றின் செயல்பாடுகளால் நாம் பெரிதும் பயனடைகிறோம். இருப்பினும், நாம் விரும்பி உணவளிக்கும்போது அல்லது நம் நகரத்தைச் சுற்றி அவற்றின் உணவுக்கான வாய்ப்பை உருவாக்கும்போது மனிதர்கள்-குள்ளநரிகளுக்கு இடையே மோதல்கள் ஏற்படலாம். குள்ளநரிகள் நடத்தையில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் விலங்குகளாக இருக்கின்றன, மேலும் அவை தங்களுக்கான உணவைத் தேடுவதை விட, எளிதில் கிடைக்கும் உணவு ஆதாரங்களையே எடுத்துக் கொள்ளும்.





**பிராம்ப்டன் நகர விலங்குகள் சேவை அமைப்பு**

475 கிறிஸ்லர் ட்ரைவ்
905.458.5800
**www.brampton.ca/animalservices**

குள்ளநரிகள் இருக்குமிடத்தில் வாழ்வது பற்றிய மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்க:

இயற்கை வளங்கள் மற்றும் வனத்துறை அமைச்சகம்,

**1.800.667.1940**
**www.ontario.ca/mnrf**

Coyote Watch Canada

**905.931.2610**
**www.coyotewatchcanada.com**

311

**Tamil**

BRAMPTON

City of Brampton
**Animal Services**



# குள்ளநரிகளுடன் வாழ்தல் வசந்த காலம் & கோடைக்காலத்தில்

BRAMPTON

**Tamil**

## வசந்தகாலம் மற்றும் கோடைக்காலமே குள்ளநரிகள் குட்டியிடும் காலமாகும்

### நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடைப்பட்ட காலமே குள்ளநரிகள் குட்டியிட்டு குகையில் வாழும் காலமாகும். வருடத்தின் இப்பருவத்தில்தான் குள்ளநரிகள் குட்டியிட்டு இனப்பெருக்கம் செய்து குட்டிகளை வளர்க்கும். தங்கள் குகைகளை பாதுகாப்புடன் வைத்திருப்பதில் கவனம் செலுத்துவதால்தான் இப்பருவத்தில் அதிகம் கண்ணில் படும் மற்றும் சுறுசுறுப்பாக சுற்றித்திரியும்.

### உங்கள் பகுதியில் ஒரு குகை இருந்தால் என்ன செய்வது

- குட்டிகள் இளமையாக இருக்கும் சில வாரங்களுக்கு உங்கள் நடைப்பயண பாதையை மாற்றுவது பற்றி யோசியுங்கள். ஒருவழியாக குள்ளநரிகள் குகையை விட்டு வெளியேறிவிடும்.
- குள்ளநரிக் குட்டிகளின் பெற்றோர் குட்டிகளைக் கைவிட்டதாக தெரிந்தாலும் கூட, குட்டிகள் அல்லது குகைகளில் அருகில் செல்ல வேண்டாம்.
- குகைக்கு வெளியே நிற்கவோ அதை நெருங்கவோ வேண்டாம்.
- உங்கள் நாயை ஒரு கழுத்துப் பட்டையால் கட்டி வைத்து அப்பகுதியில் இருந்து தூரமாக விலக்கி வைக்கவும்.
- குள்ள நரி நட்பாகத் தோன்றினாலும்கூட, உங்கள் நாயை அதனிடம் நெருங்க, துரத்த அல்லது விளையாட அனுமதிக்காதீர்கள். நாய்களை ஒரு குள்ளநரியுடன்பழக விடுவதோ அல்லது துன்புறுத்துவதோ கூடாது; இது இயல்பாகவே கூச்ச சுபாவம் கொண்ட குள்ளநரியின் சுபாவத்தை மாற்றிவிடும்.

### மேலும் நான் என்ன செய்யலாம்?

- குள்ளநரிகள் எந்தெந்த பகுதிகளில் அடிக்கடி வந்து செல்கின்றன என்பதை நகரத்திற்கும் குடியிருப்பாளர்களுக்கும் தெரிவிக்க, இவை கண்ணில் படும் பகுதிகள் பற்றி ஆன்லைனில் brampton.ca/coyotes இல் சமர்ப்பிக்கவும்.
- மீதம் வைத்துவிட்டுச் செல்லப்பட்ட உணவு அல்லது அதிகமாக பயிர் வளர்ந்த கட்டிடங்கள் பற்றிய சேவைக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க, 311ஐத் தொடர்புகொள்ளவும்.
- நோய்வாய்ப்பட்டதாகவோ அல்லது காயமடைந்ததாகவோ நீங்கள் நம்பும் குள்ளநரியைக் காண நேர்ந்தால் 311ஐத் தொடர்புகொள்ளவும்.
- தகவலறிந்தவராக இருங்கள் மற்றும் குள்ளநரி போல புத்திசாலியாக இருங்கள்!



## குள்ளநரி ஒன்று உங்களை நோக்கி வந்தால் அல்லது பின் தொடர்ந்தால் என்ன செய்வது:

- **நின்றுவிடுங்கள்.** குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகள் இருந்தால் கையில் எடுத்துக்கொள்ளுங்கள்.
- **அசையாமல் நில்லுங்கள்.** ஒரு ஒருபோதும் குள்ளநரியை பார்த்து ஓடவேண்டாம்.
- **உங்களை நீங்களே பலசாலியாக்குங்கள்.** கோபமுற்றதாக, நிமிர்ந்து நின்றபடி உங்கள் கைகளை உயர்த்தி காற்றில் அப்படியும் இப்படியும் அசையுங்கள். ஆச்சரியப்படுத்துகின்ற, சட்டென்ற மற்றும் கோபமானதாக இருக்கின்ற சைகைகள் சிறப்பாக செயல்புரியும்.
- **உரத்த குரல் எழுப்பி மனோதிடத்துடன் இருங்கள்.** உரக்க கத்துங்கள் உங்கள் கால் பாதங்களைத் தரையில் அடியுங்கள், கைகளைத் தட்டுங்கள். இரைச்சலிடும் கருவிகளை ( எடுத்துக்காட்டு: விசில் அடித்தல், பிளாஸ்ட்டிக் பை அல்லது குடையால் வெடிப்பு சத்தம் எழுப்புங்கள்.
- **எதிர்த்துப் போராடுங்கள்.** குச்சிகள் அல்லது கற்களை குள்ளநரியை நோக்கி எறிந்து அதனை பயமுறுத்தி நிறுத்துங்கள். குள்ளநரி மீது படாமல் வீசுங்கள்.
- **மெதுவாக பின்வாங்குங்கள்.** கண்ணுக்கு கண் வைத்தபடி பின் நோக்கி வாருங்கள் ஆனால், ஒருபோதும் ஓட வேண்டாம்.

உங்கள் குடும்பத்தினருடன் இந்த செய்தியைப் பகிர்ந்து கற்றுக் கொடுங்கள்; அதனால் அவர்களும் குள்ளநரிகளிடம் இருந்து எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பதை அறிவார்கள்.

பொதுமக்களின் பாதுகாப்புக்கு குள்ளநரிகள் ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக தெரிந்தால், உடனடியாக, 911 ஐ அழைக்கவும்.



## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### நகர நிர்வாகம் குள்ளநரிகளை ஏன் இடம் பெயர வைப்பதில்லை?

குள்ளநரிகளை இடமாற்றம் செய்வது அல்லது கொல்வது என்பது ஒரு விரும்பத்தக்க விஷயமே கிடையாது; இந்த விலங்கினைப் பிடிப்பது மிகவும் கடினமானது மற்றும் இது ஒரு தற்காலிக அணுகுமுறை மட்டுமே. ஒரு குள்ளநரி அகற்றப்பட்டால், அது மற்ற குள்ளநரிகள் அங்கு வந்து சேர வழி வகுத்துவிடும். ஒன்ட்டாரியோவின் மீன் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குள்ளநரிகளைப் பிடித்து ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் இடமாற்றம் செய்வது அனுமதிக்கப்படுவதில்லை.

### குள்ளநரி சுறுசுறுப்புடனும் என்னைப் பின்பற்றியபடியும் இருப்பது ஏன்?

குள்ளநரிகள் தங்கள் வாழிடத்தில் இருப்பவை அனைத்தையும் பற்றி விழிப்புணர்வுடனும் தெரிந்துகொள்ளும் ஆசை கொண்டவையாக இருக்கும். புதிதாக வரும் மனிதர்களைக் கண்காணிக்கும், கூடவே செல்லும் அல்லது மறைவாகப் பின்தொடர்ந்து செல்லும்; மனிதர்கள் குள்ளநரிகளின் வாழிடத்தை விட்டு அகன்றுவிடுவதை உறுதி செய்துகொள்ளும்; இதன்மூலம் தமது குடும்பத்திற்கு ஆபத்து இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளும்.

### நாய்கள் மற்றும் குள்ளநரிகள்

நாய்களுக்கு கழுத்துபட்டை அணிவிக்காதபோது அல்லது அதுபோன்ற சமயங்களில் குள்ளநரிகள் மற்றும் நாய்களுக்கு இடையேயான மோதலான சூழ்நிலை உருவாகலாம். உங்கள் நாயை உங்கள் வீட்டு முற்றத்தில் இருக்கும்போது கண்காணிக்கவும்; நடைபயிற்சியின் போது அவற்றை ஒரு குறுகிய நாய்ச்சங்கிலியால் பிணைத்தபடி செல்லவும். உங்கள் பகுதியில் ஒரு குள்ளநரி கண்ணில் படுவதாக உங்களுக்குத் தெரிந்தால், உங்கள் நடைப்பயிற்சி நேரத்தை அல்லது பாதையை தற்காலிகமாக மாற்றவும்.

### அவற்றுக்கு நான் உணவளித்தால் என்னவாகும்?

வனவிலங்குகளுக்கு ஒருபோதும் உணவளித்து பழக்காதீர்கள் அல்லது குள்ளநரிகளுக்காக வீட்டின் வெளியே உணவு வைக்காதீர்கள். மிகவும் புத்திசாலித்தனமான விலங்குகளாக இருக்கும் குள்ளநரிகள், மனிதர்கள் தங்களுக்கு உணவளிக்கிறார்கள் என அடையாளம் கண்டுகொள்ளும். இதன் விளைவாக, அவை அந்த பகுதிக்குத் திரும்பத் திரும்ப வரும்; மற்றும் மனிதர்களிடம் வெவ்வேறான நடத்தைபாவனையை வெளிப்படுத்தலாம்

### உங்கள் கட்டிடங்களில் இருந்து குள்ளநரிகளை தொலைவில் இருக்கவையுங்கள்

குள்ளநரிகள் மக்களுக்கு குறிப்பிடத்தக்க ஆபத்து உண்டாக்குவதாகத் தெரியவில்லை. ஆனால் உங்கள் கட்டிடத்தின் அருகில் அல்லது நடைப்பயணத்தின்போது அவற்றில் ஒன்றைப் பார்ப்பது அச்சம் தரலாம். நமது கொல்லைப்புறங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் குள்ளநரிகள் வராமல் தடுக்க சில வழிகளை நாம் மேற்கொள்ளலாம்.

- உங்கள் கட்டிடத்திலிருந்து அனைத்து உணவு ஆதாரங்களையும் அப்புறப்படுத்தவும் எ.கா. காலாவதியான காய்கறி தோட்டங்கள், பறவைகளுக்கான விதை உணவுகள், அழுக்கடைந்த பார்பிக்யூக்கள், செல்ல பிராணிகளுக்கான உணவு போன்றவை.
- வேலிகள் மற்றும் அலமாரி அடுக்குகள் மற்றும் கொட்டகைகளுக்கு அடியில் உள்ள இடைவெளிகளை மூடவும்.
- செல்லப்பிராணிகளை வெளியே தனியாக விடாதீர்கள்.
- குள்ளநரிகளின் இருப்பைத் தடுக்க உங்கள் கட்டித்தில் துரத்துதல் அமைப்பு இட்டு அதனை பயிற்சி செய்யுங்கள்.